தொல்காப்பியத் தோற்றம்

-SEK

தமிழண்ணல்

தொல்காப்பியத் தோற்றம்

தமிழண்ணல்

தமிழ்ப் பயிற்சிக் களம்
புதிய தமிழியக்கம்
‘ஏரகம்’, 4/585 (732) சதாசிவ நகர்,
முதன்மைச் சாலை, மதுரை - 625 020.
பேசி : 0452-2533792 செல்-பேசி : 94430-64749

புதிய தமிழியக்கம் -1
தி.வ. ஆண்டு ௨0௩௯ , ஐப்பசி
முதற்பதிப்பு : அக்டோபர், 2008
உரிமை ஆசிரியருக்கு

விலை உருவா 10/-

நூல் விவரம்

நூலின் பெயர்	:	தொல்காப்பியத் தோற்றம்
உரையாசிரியர் பெயர்	:	தமிழண்ணல்
நூலின் தன்மை	:	இலக்கணம் - அறிமுகம்
முதற்பதிப்பு	:	அக்டோபர், 2008
தாளின் தன்மை	:	வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	கிரவுன்
அச்சு எழுத்து அளவு	:	10 புள்ளி
பக்கங்கள்	:	32
விலை	:	உருவா 10/-
அச்சிட்டோர்	:	பிரகாஸ் ஆப்செட் அச்சகம்
ஒளி அச்சுக் கோர்வை	:	ஐ கேட்சர், மதுரை
வெளியீடு	:	தமிழ்ப் பயிற்சிக்களம்

SELLING RIGHTS

MEENAKSHI PUTHAKA NILAYAM
Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai-625 001.
Tel: Off: 2345971 Resi: 2560517
Email:meenakshiputhakam@hotmail.com

தொல்காப்பியத் தோற்றம்

1. இந்திய ஒருமைப் பார்வை

ஒரு காலத்தில் குமரிக்கண்டம் முதல், சிந்து நதி வரை, தமிழே வழங்கியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும், தமிழரிடம் இந்த 'இந்தியப்' பார்வை இருந்தது. **இந்திய நாட்டை** ஒரே நாடாகப் பார்க்கும் பார்வை சங்கப்பாடல்களில் காணப்படுவது, இதற்கொரு சான்றாக அமைகிறது.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
(புறம். 6)

நெட்டிமையார் எனும் புலவர் **பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியை** இவ்வாறு பாடுகிறார்! அவன் புகழ் இவ்வாறு இவ்வுலகில் மட்டுமன்றி, கீழ்மேல் உலகங்களிலும் பரவி இருந்ததாம். இதனை 'உயர்வு நவிற்சி' எனலாமாயினும், ஒரே நாடாக இந்தியாவைப் பார்ப்பது புலனாகிறது. வடக்கே பனிமலை (இமயம் - பனிமலை); தெற்கே அச்சந்தரும் குமரி, கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் என எல்லைகள் கூறப்படுகின்றன.

குறுங்கோழியூர் கிழார், சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பாடிய புறப்பாடலிலும் இதுபோன்று காண்கிறோம்.

தென்குமரி வடபெருங்கல்
குணகுட கட லாஎல்லை

குன்றுமலை காடுநாடு
ஒன்றுபட்டு வழிமொழிய (புறம்.17)

இந்திய நாட்டை ஆட்சிசெய்த மன்னர்களின் வழிவந்தவன் என்று இம் மன்னன் புகழப்படுகின்றான்.

'ஹிமம்' என்றால் பனி. தமிழில் இது பனிமலை என்றே குறிக்கப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டுப் பெரும்புலவர் பாரதியாரும் 'வெள்ளிப்பனிமலையின் மீதுலவுவோம்' என்றே குறிப்பிடுதல் காணலாம். தமிழ்ப் புலவர் சிலருக்கு இமயமலை பற்றிய நல்ல அறிமுகமிருந்ததை, உய்த்துணர முடிகிறது.

அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளங்கில் துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே
(புறம்.2)

இது **முரஞ்சியூர் முடிநாகராயர், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப்** பாடியது. இதில் அம்மலையிற் காணப்பட்ட **'நவ்வி'** என்னும் மான்வகை; அந்தணர்கள் 'சந்தியாவந்தனம்' செய்தல், அவர்கள் வளர்க்கும் 'முத்தீ'-யக்ஞ விளக்கில், குளிர்காய்ந்து மான்கள் உறங்குதல், பொன்மயமான சிகரங்கள் யாவும் குறிக்கப்படுகின்றன.

கிள்ளிவளவனைப் பாடும் **நப்பசலையார்** 'ஓங்கிய வரை அளந்து அறியாப் பொன்படு நெடுங்கோட்டு இமயம்' (புறம்.39) என்று, அளந்தறிய முடியாத இமயமலையின் பொன்னிறச் சிகரங்களைக் குறிப்பதுடன், 'இமயம்' எனும் சொல்லையும் ஆள்கின்றார். **பரணர்** என்ற வரலாற்றுப் புலவர், **கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப்** பாடும்போது, 'வடதிசை எல்லை இமயமாகத் தென்னங்குமரியொடு ஆயிடை' என்று, அவனது ஆளுகைக்குட்பட்ட நாட்டைக் குறிப்பிடுகின்றார். அதில் 'கடவுள் நிலைய கல்ஓங்கு நெடுவரை' என, கயிலாயத்தில் சிவன் இருப்பது பற்றிய குறிப்பும் வருகிறது. (பதிற்று.43).

பதிற்றுப்பத்தில் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடும்போதும், அவன் இமயம் வரை வென்று ஆண்டதாகப் புனைகின்றார்.

கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்திலங்கு அருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை... ***(பதிற்று. 11)***

கவிர் - முள்முருங்கை, நரந்தம்-நாரத்தை, என அங்குள்ள மரங்களையும் ஆரியர் - என அங்கு மிகுதியாக இருந்த மக்களையும் பேரிசை இமயம் - என அதன் புகழையும் குறிப்பிடுகிறார். முன்பு புறப்பாடலில் **'நவ்வி'** என, அங்குள்ள சிறப்புக்குரிய மான்வகை குறிக்கப்பட்டது (புறம்.2). இப்பாடலில் கண்ணனார் **'கவரி'** மானைக் குறிப்பிடுகிறார். இதுவும் தமிழகத்தில் காணப்படும் மான்வகை அன்று. குளிர்மிகுந்த இமயமலைச் சாரலில் காணப்படுவது. இதன் மயிர் நீக்கப்படின், உடனே இறந்துபடும் இயல்புடைய மான் இது. அடர்த்தியான மயிருடன் இது வளரும் எனவும், அதனை ஒரு பயன் கருதி மனிதன் கத்தரித்து எடுக்கும் பழக்க முடையவனாக இருந்தான் எனவும் இதனால் உய்த்துணரலாம். திருவள்ளுவர், 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர் நீப்பர் மானம் வரின்' *(969)* என்று இம் மான்பற்றிக் கூறுவது இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

இங்ஙனம் வருமிடங்கள் பலவாகும். இதனை நாம் அவரவர் புகழாகவும் கருதலாம்; அல்லது அவரவர்தம் முன்னோரின் புகழை அவர்மீது ஏற்றிச் சொல்வதாகவும் கொள்ளலாம். மேலும் கங்கை, கங்கையின் கிளையாறாகிய சோணை, பாடலிபுத்திர நகரம் என்பனவும் குறிக்கப்படுகின்றன (அகம். *265*. குறு.*75*).

வடநாட்டு அரச குடிவழியில் **நந்தர்** பற்றியும் (அகம் *251, 165*) **மோரியர்** பற்றியும் வரலாற்றுச் சிறு குறிப்புக்கள் இடம் பெறுகின்றன (அகம்.*69, 251, 281*; புறம். *175*). வடநாட்டு அரசியல் வரலாற்றில் இவர்களே தொன்மைமிக்கவர் என்பது குறிப்பிடற்பாலது.

இவர்களுக்குப் பின்வந்த அரசபரம்பரை பற்றி, எந்தக் குறிப்பும் எவ்விலக்கியத்திலும் இடம்பெறவில்லை. இதனால் வடநாடு, தென்னாட்டினிடையே இருந்த தொடர்பும் உறவும் பழைமை யானதென்றும் பின்னர் அவை தனித்தனியானவை போல, அத்துணைத் தொடர்பின்றிப் போயின எனவும் உய்த்துணர வேண்டியிருக்கிறது.

கிரேக்கப் பயணிகள் தென்னாடு போந்து வாணிகம் செய்தது பற்றிய குறிப்புப் பல பாடல்களில் இடம்பெறுகிறது *(அகம். 149, புறம்.56, நெடுநல். 101-102, முல்லை. 59-62)*. தொல் பொருள் ஆய்வில் **யவனர்** குடியிருப்பு, அவர்களின் பொற்காசுகள், மட்பாண்டங்கள் போல்வன கிடைத்திருப்பது, இதனை உறுதி செய்கிறது. பிளைனி, தாலமி, பெரிபுளுசு நூலாசிரியர் போன்ற கிரேக்கப் பயணிகளின் குறிப்புக்களில் தமிழகக் கடற்கரைப் பட்டினங்கள் தொண்டி, முசிறி போல்வன இடம்பெற்றுள்ளன.

பாரதப்போர், இராமகாதை பற்றிய குறிப்புக்களும் சங்கப் பாடல்களில் உள *(பாரதம் புறம்.2, அகம். 232; இராம காதை. அகம். 70, புறம் 378)*. வடமொழி பாரத இராமாயணக் காப்பியங்களிலும் பிறநூல்களிலும் தமிழக மூவேந்தர் பற்றியும், வாணிகத் தொடர்பு பற்றியும் வந்துள்ளவற்றை பி.டி. சீனிவாச அய்யங்கார், தமது தமிழர் வரலாறு பற்றிய ஆங்கில நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். History of Tamils by P.T.S. 1921 *(பக்.44 -62 மலை, 135-148)*

'சாலமன் காலத்திலிருந்து' தமிழிலக்கிய வழியில், தமிழர் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய திருமதி ஹெப்சிபா சேசுதாசன், அம்மன்னன் தமிழகத்திலிருந்து தங்கம், வெள்ளி, முத்து முதலிய விலை மதிப்பற்ற பொருள்களையும் மயில்தோகை, சந்தனம் முதலியவற்றையும் இறக்குமதி செய்ததை, அந்த நாட்டு இலக்கியச் சான்றுகளைக் காட்டி நிறுவுகிறார்.

மேலும் ஆப்பிரகாம் என்பவர் ஊர் (Ur) என்ற ஊரிலிருந்ததாக *(கி.மு. 2000)* வரும் குறிப்பைக் காட்டி, இன்று 'ஊர்' எனும்

பெயரால் தமிழகத்தில் எத்தனை ஊர்கள் உள்ளன என ஆர்வத்துடன் வினவுகிறார். (உலகெங்கும் - குறிப்பாக ஆசியாக் கண்டம் முழுவதும் ஊர் என முடியும் ஊர்கள் பல நூற்றுக் கணக்கின. (Hephzibha Jesudasan, Count-Down from Solomon, Chennai, 1999) *(பக்.46)*.

அந்நூலுக்கு நீண்ட முன்னுரை வழங்கிய, கேரளப் பல்கலைக் கழகத்தில் செருமன் மொழிப் பேராசிரியராக விளங்கிய 'செலின் மாத்தியூ' (Celine Mathew), 'தமிழ் இலக்கியம்', கிறித்தவ ஊழியின் இரண்டாம் நூற்றாண்டிலேயே, இத்தகைய செம்மொழித் தன்மையை அடைந்தது பற்றித் தம் வியப்பை' விளக்குகின்றார். ஆங்கில இலக்கியத் தொடக்கம் பதினான்காம் நூற்றாண்டு, செருமன் இலக்கியத் தொடக்கம் எட்டாம் நூற்றாண்டு, தொன்மை நோக்கிப் பார்க்கும்பொழுது தமிழ் கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம், பெர்சியன் மற்றும் எபிரேய இலக்கியங்களுடன் சமமாக வைத்து எண்ணத்தக்கதாகும், '' என்று கூறுகிறார்.

2. தமிழ்நாடு

தொல்காப்பியமும் சங்கப் பாடல்களும் குறிப்பிடும் தமிழக நிலப்பரப்பு 'வடவேங்கடம் தென்குமரி' என்பனவாகும். வடக்கே வேங்கடமலைத் தொடர் ஏழுமலைகளென, இன்றைய ஆந்திர நாட்டு நெல்லூர் வரை இருந்தன; அவற்றைப் புல்லி, திரையன் போலும் தமிழ் மன்னர்கள் ஆண்டனர். *(அகம் 83, 85)* தெற்கே இருந்த குமரிக் கண்டம் மறைந்து, குமரியாறு மட்டும் ஓடிய நிலப்பரப்பு இருந்துளது. இக்காலத்தே வடக்கே வடுகர் எனப்படும் தெலுங்குக் கிளைமொழி பேசும் மக்கள் வாழ்ந்ததைச் சங்கப்பாடல்கள் 'மொழிபெயர் தேஎம்' என்று குறிப்பிடும் *(அகம். 31, 21, 23)*. சேரநாடாக இருந்த மலையாளம் இடைக் காலத்தே, மேற்குத்தொடர்ச்சி மலைக்கு அப்பால் தனிநாடாயிற்று; அதனை ஒட்டியே சங்கப் பாடலில் எருமைநாடு எனக் குறிக்கப்பட்ட *(மைசூர் - எருமையூர்)* கருநாடகமும் பிரிந்தது. மேற்குப்பகுதியைக் கடல் எனக் குறித்தமை மாறி, வேற்று மொழி நாடுகளாயின.

இன்றைய நிலையில் வடக்கே திருத்தணி தொடங்கி, தெற்கே குமரி முனைவரை தமிழகம் விளங்குகிறது. கிழக்கிலும்

தெற்கிலும் கடல்களே எல்லையாகவுள. இதனை 'வண்புகழ் மூவர், தண்பொழில் வரைப்பு' (மூவேந்தராண்ட நாடு) என்றே தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. சேர, சோழ, பாண்டியரும் அவர்கள் வழிவந்த சிறுசிறு குடிவழிச் சிற்றரசர்களும் பல இனக் குழுக்களும் ஆண்டமை, சங்கப் பாடல்களால் புலனாகின்றன.

3. ஐந்துநிலப் பாகுபாடு

சங்க காலத்தில் தமிழகம் நான்குநிலப் பாகுபாடாக விளங்கியது. இவை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் எனப்பட்டன. குறிஞ்சி-மலையும் மலைசார்ந்த நிலங்களுமாகும். முல்லை - அடர்ந்த காடுகளும் அவற்றின் பகுதிகளுமாகும். மருதம் - ஆற்றுநீர்ப் பாசனமுள்ள வயல்கள் சூழ்ந்த சமவெளிகளாகும். நெய்தல் - கடற்கரை ஓரப்பகுதிகள். இவற்றுள் குறிஞ்சி, முல்லை நிலங்களின் எல்லையோரப் பகுதிகள், வெப்பம் மிக்க கோடைகாலத்தில் வறட்சியுற்று, புல் பூண்டுகளும் வாடி, வெட்டவெளியாக மாறும். அன்றைய இயற்கைச் சூழலில், பிற நிலப்பகுதிகள் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறானவையாய் இருந்ததால், இந்த வறட்சியால் திறந்தவெளியாய்க் கிடந்த இந் நிலப்பகுதியே மக்கள் போகவரப் பெருவழியாய்ப் பயன்பட்டது. அவை மீண்டும் மழைபெய்யும் காலத்தே, சிறிது தளிர்த்து, இலை தழைகள் தழைத்துப் பூத்துக் குலுங்கிக் காணப்படும். அதனால் இவை பாலைநிலம் எனப்பட்டன. பாலை என்றால் சகாரா போன்ற மணல்வெளிப் பாலையன்று இது. பருவவேறுபாட்டால் மாறும் இதை, காலத்தொடர்புடைய நிலம் எனலாம்.

இந்த ஐந்து நிலங்களும் மிகத் தொன்மைமிக்க காலத்தே, தனித்தனி வாழ்வு முறைகளைக் கொண்டிருந்தன.

அவ்வந் நிலம் சார்ந்த தனித்தனித் திணைப்பாடல்கள் (நிலப் பாடல்கள்) தோன்றின. அவற்றின் பாடுபொருளும், இலக்கிய உருவாக்க உத்திகளும்கூட வேறுபட்டன. பாலை நிலத்தில் எயினர் எனும் குடிவழியினரும் ஆறலை கள்வரும் பிறர் சிலரும் வாழ்ந்தனர். அவ்வழியாகவே வாணிகச் சாத்துகளும்

வெளிநாடுகள் போவாரும் போய்வந்ததால், அவர்களிடம் உள்ள பொருள்களைக் கொள்ளை அடிப்பதும் கொலை களவுகட்கு அஞ்சாது வாழ்வதும் அவர்களின் வழக்கமாயின. இந்நிலம் 'பிரிவு' பற்றிப் பாடப் பின்னணியானது. நான்கு நில மக்களும் பிரிவராதலின், இப் பாலை நிலமும் பாடல்களும் அந் நானிலத்திற்கும் பொதுவாயின.

4. தமிழ்மொழி

தமிழ்மொழியின் தொன்மை பற்றி அறிய இயலவில்லை. பரிமேலழகர் எனும் திருக்குறள் உரையாசிரியராம் வைணவ அந்தணர், சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி 'மேம்பட்டு வருதல்' என்று கூறுகிறார் (குறள். 955).

தமிழில் ஓரெழுத்தொரு மொழிகள் மிகுதி. வா, போ, தா, கா, , ஈ, நீ என அவை மிகப் பலவாகும். வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார், மாந்தர்கள் ஆடிப்பாடி, சைகைவழி மொழி பேசிய காலத்தது தமிழ் என்று கருதுகின்றார் (தமிழர் வரலாறு: பக்.67).

கால்டுவெல் பாதிரியார், தமக்குமுன் மேனாட்டார் தொட்டுச் சென்ற ஆய்வை முழுமைப்படுத்தி, இந்திய நாட்டில் 'திராவிட மொழிக் குடும்பம்' ஒன்று, தொன்றுதொட்டு விளங்கியதை நிறுவினார். அவர் திருந்திய திராவிட மொழிகள் ஆறு; திருந்தாத திராவிடமொழிகள் ஆறு எனப் பாகுபடுத்தினார். அவருக்கு முன் சமஸ்கிருதமும் ஆரிய மொழிச் சார்பும் மட்டுமே அறியப்பட்டு, விளக்கப் பெற்றிருந்தன. அவர்தான் அவ் வடமொழிக்கு நிகரானதும் அதுபோன்ற தொன்மை யுடையதுமான பழந்திராவிட மொழி பற்றியும் அது வட மொழித் தொடர்பால் வெவ்வேறு மொழிகளாகப் பிரிந்தது பற்றியும் அவ்வாறு பிறமொழிகள் பல மாறினும், தமிழ் ஒன்றே தன்னிலையில் திரிவுபடாமல், தனித்தன்மையுடன் இன்றும் விளங்கி வருகின்றதென்றும், பழந்திராவிட மொழியுடன்

மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை இன்றளவும் காத்து வருகின்றதென்றும் மிகத் தெளிவாக விளக்கிச் சான்றாதாரங்களையும் தொகுத்துத் தந்தார்.

பின்னர் சமஸ்கிருத அறிஞர்களான எமனோவும் பரோவும், திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி ஒன்றைத் தொகுத்தளித்தனர். (T.Burrow and M.B.Emeneau : A Dravidian Etymological Dictionary) அவர்கள் இந்தியநாடு முழுவதும் தேடி, தமிழுட்பட 23 திராவிட மொழிகளை இனங்கண்டு கூறினர். வட இந்தியத் திராவிட மொழிகள், நடுவண் இந்தியத் திராவிட மொழிகள், தென்னிந்தியத் திராவிட மொழிகள் என அவை வகைப்படுத்தப்பட்டன.

வடமொழிச் சொற்களைத் தமிழும் பிற திராவிட மொழிகளும் கடன்பெற்றன என்ற கருத்தே, நிலவி வந்ததை மாற்றி, வடமொழியும் தமிழிலிருந்து சொற்களைக் கடன் பெற்றதுண்டு எனச் சான்றுகளுடன் எடுத்துக் கூறினர்.

பி.டி.சீனிவாச அய்யங்கார், ஒரு காலத்தில் இந்தியநாடு முழுவதும் தமிழும் அதனுடைய கிளை மொழிகளுமே வழங்கின என்றார். அவர் தாம் சமஸ்கிருத நூல்கள் அனைத்தையும் முற்றிலும் கற்றுவிட்டு, இவ்வாறு கூறுவதாகவும், 'வாக்கிய அமைப்புப்' போன்ற, சில அடிப்படையான தமிழ் இலக்கணக் கூறுகளையே வடமொழியும் அதன் கிளைமொழிகளும் பெற்று வளர்ந்தன எனவும் கூறியுள்ளார். (History of Tamils:p.2)

இடைக்காலத்தே 'சமஸ்கிருதமயமாக்குதல்' என ஒன்று, ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் கி.பி.3 முதல் 7 நூற்றாண்டு முடிய இயக்கமாகத் தொடர்ந்து நடந்து, தமிழர்களின் சமயம், கலைகள், வானியல், கணியம் (சோதிடம்), சடங்குகள், வழிபாடுகள் முதலானவை அனைத்தும் மாற்றப்பட்டு, அவற்றைத் தமிழ் வடமொழியிலிருந்து கடன்பெற்றவை போல ஆகிவிட்டன என விளக்கியுள்ளார். சோழப்பேரரசர் காலத்தும், வடமொழிமயமாக்கல் தொடர்ந்தது. தமிழர்கள் அடிமை மனப்பான்மையில் ஊறிப்போயினர்.

தமிழ் மொழியின் அமைப்பும் இலக்கியப் போக்கும் அதனை 'வீரயுகம்' (Heroic Age) சார்ந்தவை என நினைப்பூட்டுகின்றன. கிரேக்க வீரயுகம் பற்றி சி.எம். பௌரா நன்கு விளக்கியுள்ளார்.* க.கைலாசபதி 'தமிழ் வீரயுகப் பாட்டுப்' பற்றி, தெளிவான ஆய்வுநூல் ஒன்றைத் தந்துள்ளார். (K. Kailasapathy, Tamil Heroic Poetry, Kumaran Book House, Chennai 2002). அமெரிக்க நாட்டு, சமஸ்கிருதப் பேரறிஞர் ஜார்ஜ் ஹார்ட், இவ்வகையில் உலக மொழிகளில் இலத்தின், சமஸ்கிருதத்தை விட, கிரேக்க மொழியுடன் ஒப்பிடக்கூடியது தமிழ் ஒன்றே எனக் கூறுகின்றார்.

தமிழ்மொழி ஒன்றே மூவாயிரம் ஆண்டுகளாகப் பழந்தமிழ், புதுத்தமிழ் எனப் பிரிந்துவிடாமல் ஒரே மொழியாக நிலை பெற்றுள்ளது. கிரேக்கம் உட்பட, ஏனைய தென்னாட்டுத் திராவிட மொழிகள் வரை பழைய மொழி, புதிய மொழி எனப் பிரித்து நோக்கவும், புதுப்பித்துப் புத்துயிர் தரவும் வேண்டியவை ஆயின. அப்பழையவை யாவும் பேச்சுவழக்கற்றுப் போயின. ஓரளவு அகராதி வைத்துப் படிக்குமாறு, அருஞ்சொற்கள் பல இருப்பினும், தமிழ் ஒன்றே இன்றளவும் அமைப்பிலும் வழக்கிலும் ஒரு தன்மையதாகவுளது.

5. இலக்கிய வகை

1) திணை இலக்கியம் *2)* நீதி/அற இலக்கியம் *3)* முற்காலக் காப்பிய இலக்கியம் *4)* பக்தி இலக்கியம் *5)* பிற்காலக் காப்பிய இலக்கியம் *6)* சிற்றிலக்கிய காலம் *7)* உரைநூற் காலம் *8)* நாடகக் கீர்த்தனை, நாட்டுப்புறவியல், சித்தர் காலம் *9)* மறுமலர்ச்சிக் காலம் (ஐரோப்பியர் வருகை, உரைநடை, புதினம், சிறுகதை, கட்டுரை முதலியன) *10)* தற்காலம் (ஊடகங்கள்,

---

*In this regard, Tamil resembles Greek more than Latin; during the first three centuries of the common era, it produced an anormous literature, which we term 'Sangam literature', that is entirely its own and owes very little to any outside tradition." (Forward p.17; வா.செ.குழந்தைசாமி, உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ், சென்னை, *2005*).

புதுக்கவிதை முதலியன). இங்ஙனம் காலந்தோறும் வளர்ந்த தமிழின் தோற்றுவாய் - ஊற்றுக்கண் தொல்காப்பியமாகும்.

6. தமிழ்மொழியின் தனிச்சிறப்பு

'தமிழ்' என்றால் அமிழ்து எனலாம். அமிழ்து - சாவா மருந்து. அமிழ்து - எனும் சொல்லை இடைவிடாது, தொடர்ந்து சொல்லுங்கள்: அமிழ்து அமிழ்து அமிழ்து. அமிழ்தமிழ்தமிழ்து என வரும். அமிழ்து தமிழாகும். அதனால்தான் பிங்கலந்தை நிகண்டு 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்' என்று, தமிழ் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுகிறது. இனிமை தனிச்சுவை. நீர்மை - மென்மை. உலகிலேயே 'வல்லோசை' குறைந்த மொழி தமிழ் ஒன்றே. க, ச, ட, த, ப, ற - என வல்லோசைகளாக இருப்பனவும் மொழியிறுதியில் வாரா. படக், பாக்கட், ஞாயிற், உடைப் - இவை முறையே படகு, பாக்கட்டு, ஞாயிறு, உடைப்பு என வரும். அதாவது ஆறு வல்லெழுத்தும், இறுதியில் 'உகரம்' பெற்று மென்மைப்படும். தமிழின் இயல்புகளில் இஃது ஒன்று.

7. தமிழும் கிரேக்க மொழியும்

தமிழ் 'வீரயுகம்' சார்ந்தது. உலகிலேயே தமிழும் கிரேக்கமுமே தெளிவாக, வீரயுக நிலையை வெளிப்படுத்துகின்றன. வீரயுகம் என்பது, மனிதன் விலங்கு நிலையைவிட்டு, மனித நிலைக்கு மாறிக் கொண்டிருந்த காலம். அது **'வாய்மொழிக்'** காலம் எனப்படும். எழுத்துமொழி தோன்றாத காலம். அதன் தொடர்ச்சி பாணர், பொருநர், விறலியர், கூத்தர் போல்வார் காலம். மேலும் தொடர்ந்தபோது புலவர் காலம் முகிழ்த்தது. இம் மூவகைக் காலத்தையும், நம் செவ்வியல் இலக்கியங்கள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இதனால் இதுபோன்று வீரயுகத்தை வெளிப்படுத்தும் கிரேக்க இலக்கியம் ஒன்றே, தமிழோடு ஒப்பிடக் கூடியது என மேனாட்டு அறிஞர் பலர் கூறியுள்ளனர்.

8. எஞ்சியிருக்கும் செவ்விலக்கியம்

வாய்மொழிக் காலத்திலிருந்து, புலவர் வழக்காற்றுக்கு மாற ஆயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்பர். அதன் பிறகு

தோன்றிய தமிழ் இலக்கியங்கள் கணக்கற்றன. அவற்றில் கால வெள்ளத்தில் எஞ்சியிருப்பன பத்தில் ஒரு பங்கு கூட இல்லை எனலாம். அவையே இன்று நம் 'சங்க இலக்கியம்' - 'செவ்வியல் இலக்கியம்' (Classical Literature) என்று, நமக்குக் கிடைத்துள்ளன.

9. தமிழ் இளமையின் அடிப்படை - இருவகை வழக்கு

தமிழ் தோன்றிய காலந்தொட்டு 'இருவகை வழக்காக' வழங்கி வந்துள்ளது. உலகப்பேச்சு வழக்கு வேறு; எழுத்து மொழி இலக்கிய வழக்கு வேறு. உலகப் பேச்சுவழக்கு காட்டாறு போன்றது; கழிவு நீரும் கலக்கும் இயல்புடையது. ஏட்டு வழக்கு, அல்லது இலக்கிய வழக்கு என எழுதப்படும் வழக்கு, கரையமைத்த ஆறுபோலக் கட்டுக்குட்படுத்தப் பெற்றது. அதனால் தமிழ் இன்றளவும் இளமை மாறாது இருக்கிறது.

10. தமிழ்ச்சொற் கட்டமைப்பு

உலகிலேயே தமிழ்ச் சொற்கள் போலக் கட்டமைப்புடைய சொற்களைக் கொண்ட மொழிகள் வேறு இல்லை. அவற்றில் சிறுபான்மையாகக் காணப்படும். ஒவ்வொரு சொல்லும் ஒரு கட்டமைப்புடையதாக இலங்குவது தமிழ் ஒன்றே. தமிழ்ச் சொற்களை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் முதலிய உறுப்புக்களாகப் பிரித்து விடலாம். அவ்வாறு பிரித்த உறுப்பு ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பொருளுண்டு. பிறகு அவற்றைப் பிரித்தபடியே சேர்த்துவிடலாம். ஒரு 'பொறி' அல்லது 'இயந்திரத்தை'ப் பிரிப்பதும் பிரித்தபடியே சேர்ப்பதும் போன்ற இக் கட்டமைப்பு, தமிழின் தனிச்சிறப்பாகும்.

தமிழிலக்கியம் யாவும் தேர்ந்தெடுத்த தொகுப்புக்களாக இருப்பதால், அவை ஒவ்வொன்றும் ஒருகட்டுக்கோப்புக்கு உட்பட்டிருக்கும்.

11. புறச் சமயம், பிறமொழி, பண்பாட்டுத் தாக்கங்கள்

வைதிகர்கள் வேதம் இதிகாசம் புராணம் என்று **சமஸ்கிருத மொழி**யுடன் வந்தார்கள். வேள்வி, வருணாசிரம தருமம், உருவ

வழிபாடற்ற அத்துவைதம், பிராயச்சித்த பரிகாரம் எனும் தமிழர் பண்பாட்டுக்குப் புறம்பானவற்றோடு புகுந்தார்கள். அவர்களில் ஆண் பெண் அனைவரின் அழகும் சிவப்பும் மிக உயர்ந்த பண்புடையார் போலும் புறத் தோற்றமும் இந்நாட்டு மன்னர்களைக் கவர்ந்தன. பிறகு வைதிகத்திற்கு எதிராக, ஹோமம், யக்ஞம், வருணாசிரம மறுப்புக் கொள்கையுடன் புத்த சமயத்தவரும் கடுந்துறவு, தவம் மற்றும் பாலிமொழி, சமஸ்கிருதம் எனப் பிறமொழிகளுடன் நுழைந்தார்கள். சமணர்களும் சமஸ்கிருதம், கிரந்தம் எனும் மொழியினராய் இங்கு பரவினார்கள். இவை தமிழின் மீதும் தமிழர்மீதும் தொடுக்கப் பட்ட, சமய வழிப்பட்ட பண்பாட்டுப் படையெடுப்புக்களாகும். பிறகு வந்த களப்பிர, பல்லவ, மகாராட்டிர, இராட்டிரகூட, நாயக்க, மொகலாய, ஐரோப்பிய, ஆங்கிலேய அரசுவழி அயலவர் ஆட்சிகளும் ஒரு தொடர் வரலாறாகும். இத்தனை பண்பாட்டு, அயலவர் ஆட்சிப் படையெடுப்புக்களையும் தாங்கி நின்றது தமிழ்; தலைநிமிர்ந்து நின்றது தமிழ். தமிழன் அடிமைப்பட்டான்; தமிழ்மொழி அவனையும் காப்பாற்றி, தன்னையும் காத்துக் கொண்டது. ஓர் **'இயற்கை'** வழிப்பட்ட மொழி அழியாது, அழிக்கமுடியாது என்பதற்குத் தமிழ் பொருந்திய எடுத்துக்காட்டாகும்.

12. தமிழின் நிலைபேற்றுக்குக் காரணமாக அமைந்த செவ்விலக்கியம்

1) தொல்காப்பியம் என்ற தமிழ் முதல் நூல் - அதாவது இன்று கிடைப்பவற்றுள் முதல்நூல்.
2) திருக்குறள்.
3) சங்க இலக்கியம் - எட்டுத் தொகை, பத்துப்பாட்டு.
4) இரட்டைக் காப்பியம் (சிலப்பதிகாரம், மணிமேகலை)

13. இந்நூல்களினால் தமிழுக்குக் கிடைத்த பெருமையும் சிறப்பும்

தமிழ் உலகச் செவ்வியல் மொழிகளுள் ஒன்று என்ற சிறப்பைத் தருவன இந் நூல்களே. உலகில் முதன்முதல்,

மேனாட்டாரால் கி.பி. 15, 16ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக் காலத்தில், கிரேக்க இலக்கியம் மிகச் சிறந்த, உயர்ந்த இலக்கியம் என உணரப்பட்டது. கிரேக்க இலக்கிய வளமும் சிறப்பும் இலத்தின் இலக்கியத்தை உயர்த்த, ஊற்றுக்கண் ஆனது. இவை இரண்டின் வழி, ஐரோப்பிய மொழிகள் செருமனி, பிரெஞ்சு போல்வன முதலிலும் பிறகு ஆங்கிலமும் பிறபல மொழிகளும் மறுமலர்ச்சி பெற்று வளரலாயின. அதனால் முதலில் கிரேக்க மொழியையும் பிறகு இலத்தினையும் 'செவ்வியல் மொழி' (Classical Language) எனக் குறிப்பிட்டு, அவற்றைக் கற்று, பரப்பி தத்தம் இலக்கியங்களை வளப்படுத்திக் கொண்டனர்.

அதனைப் போன்ற சிறப்ஸ்பை, உயர்வை இந்திய மொழிகளுக்குத் தந்த பெருமை, மேலே சுட்டிய சங்க இலக்கியத்திற்கும் அவற்றைத் தந்த தமிழுக்கும் உண்டு. எனவே கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம் மூன்றனோடும் ஒப்பவைத்துச் செவ்வியல் மொழி (Classical Language) எனும் சிறப்பைத் தந்த பெருமை சங்க இலக்கியத்திற்கு உண்டு.

14. 'செவ்வியல் மொழி'

செவ்வியல் மொழி என்றால் உயர்ந்தது, தனித்தன்மை உடையது, தொன்மைக் காலத்தது எனப் பொருள்படும். அதன் முதன்மையான அடிப்படை, தொன்மையாகும்.

1) தொல்பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்து முதிர்ந்து வளம்பெற்ற மொழியாக இருக்க வேண்டும். குறைந்தது இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கிய இலக்கணம் தோன்றியதாதல் வேண்டும்.

2) தான் பிறபல மொழிகள் தோன்ற, வளர உதவியிருக்க வேண்டும்; தான் பிற மொழிகளுக்குக் கடன்பட்டுத் தோன்றி வளர்ந்ததாக இருக்கக் கூடாது.

3) தொன்மை மிக்க காலத்திலேயே, தனித்தன்மையுடைய பல சிறப்புக்களைப் பெற்றிருக்க வேண்டும்.

4) இலக்கியக் கொள்கைகள் பலவற்றை உருவாக்கி, இலக்கிய உருவாக்கத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்திருக்க வேண்டும். பின்னே வந்த இலக்கிய வளர்ச்சிக்கு ஊற்றுக்கண்ணாக விளங்கியிருக்க வேண்டும். நடப்பியல், புனைவியல், குறிக்கோளியல் - மூன்றும் அமைந்ததே செவ்வியல் (Realism, Romanticism, Idealism, Classicism).

15. உலகச் செவ்வியல் மொழிகளுக்கும், தமிழுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்

கிரேக்கம், இலத்தின், சமஸ்கிருதம் மூன்றும் மிகத் தொன்மையுடையவை மட்டுமன்றி, நூல்களும் மொழி வளர்ச்சியும் உடையவை. ஹீப்ரு (எபிரேயம்), பாரசீகம், அரபியம், சீனம் என்பனவும் தொன்மைமிக்கன. தமிழ் இவற்றுடன் ஒப்ப வைத்து எண்ணத்தக்க தொன்மையும் வளமும் வளர்ச்சியும் உடையது.

இவற்றுள் தமிழும் சீனமுமே இன்றும் உலகப் பேச்சு வழக்கில் உள்ளவை. ஆயினும் சீனம் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட, பல திசை வழக்குகளை உடையது. ஒருதிசை வழக்கு மற்றவர்க்கு விளங்காதது மட்டுமன்றி, எதிரான பொருளும் தருமாம். தமிழ் இடைவெளி குறைவான இருவகை வழக்குகளை மட்டும் உடையது. இடைவெளியைக் கூட்டிப் பிளவு படுத்துபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். சீனம் - தொடக்கத்தில் சிந்தனை வளம் சார்ந்துதான் வளர்ந்தது. அரபியம், பாரசீகம், ஹீப்ரு - எல்லாம் சமயம், பத்திமை சார்ந்தவை. சமஸ்கிருதம் - தத்துவம், மெய்ம்மையியல், இதிகாசம், புராணம் சார்ந்து வளர்ந்தது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் காளிதாசர் முதலாகவே தூய தனிஇலக்கிய வகைகள் தோன்றின. இலக்கியக் கொள்கைகள் கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் பாமகர், தண்டி தொடங்கித் தோன்றி வளர்ந்தன. பாணினியின் இலக்கணம் ஒன்றே காலத்தால் முற்பட்டது.

கிரேக்கமும் இலத்தினும் இலக்கிய வளத்துடனும் இலக்கியக் கொள்கைகளுடனும் தொடக்கம் முதலே சிறந்து,

வளர்ந்த முறைமையால், தமிழுடன் மிக ஒற்றுமையுடையன. அவற்றுள்ளும் இலத்தின், தொடக்கத்தில் கிரேக்க மொழிக்குக் கடன்பட்டு வளர்ந்தது. அதனால் தமிழோடு ஒப்பிடக்கூடிய தொன்மை, தூய தனி இலக்கிய வளம், இலக்கியக் கொள்கை அமைந்த மொழி கிரேக்கம் ஒன்றேயாகும்.

கிரேக்க மொழியுட்படப்பிற மொழிகளின் தொடக்க கால இலக்கியங்கள் அனைத்தும் தெய்வங்களை, கடவுளரை, அவற்றின் கலப்படமான மீமாந்தரைக் கொண்டு படைக்கப் பட்டவை; அவற்றில் நம்பவியலா இயற்கை இகந்த நிகழ்ச்சிகள், புராணக் கூறுகள் நிரம்பியிருக்கும்.

மனித வாழ்வை மட்டுமே பாடும் தனித்தன்மையுள்ள ஒரே செவ்வியல் இலக்கியம் தமிழில் மட்டுமே உளது. இவற்றில் வரும் சிற்சில புராணத் தொன்மங்கள், மனித வாழ்வை விளக்க, மேம்படுத்தத் துணையாக மட்டும் வரும்.

ஆக உலகச் செவ்வியல் இலக்கியங்களில் கிரேக்கத்துடன் நெருங்கிய ஒற்றுமையுடையதாய், அதனிலும் வேறுபட்டு மானுட அனுபவப் பிழம்பாய்த் திகழும் தமிழ்ச் செம்மொழிச் செவ்வியல் பற்றி, தமிழராகிய நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்; தெளிவுறத் தெரிந்து கொண்டு உலகிற்கு - பிற மொழியாளர்க்கு உணர்த்த வேண்டும்.

16. ஒரு மொழியில் 'இலக்கியம் தோன்றிய பின்னரே, அதற்கு இலக்கணம் தோன்றும்' என்பது பொதுவிதி. அவ்வாறிருக்க தமிழ் முதல்நூல் இலக்கணமாக வந்த வரலாறு யாது?

தொல்காப்பியருக்கு முன்பு பல நூற்றுக்கணக்கான இலக்கிய, இலக்கண நூல்கள் தமிழில் இருந்துள்ளன. அவை அனைத்தும் இரண்டு கடல்கோள்களால் அழிந்து போயின. முதல் கடல் கோளுக்குத் தப்பிவந்த நிலையில், நிலந்தருதிருவிற்

பாண்டியன் வேண்டிக்கொள்ள, தொல்காப்பியர் தம் நூலை எழுதி, அவனது 'அவையத்தில்' (சங்கத்தில்) அரங்கேற்றினார்.

தமது நூலில் தொல்காப்பியர் 'என்ப', 'என்மனார் புலவர்', 'நல்லிசைப் புலவர்... வகுத்துரைத்தனரே', 'என்ப வாய்மொழிப் புலவர்', 'யாப்பென மொழிப யாப்பறி புலவர்', 'நூல் நவில் புலவர் நுவன்றறைந்தனரே, 'வரைநிலை இன்றே ஆசிரியற்க' - என இவ்வாறு 230 இடங்கள் வரை குறிப்பிடுகிறார். இவற்றால் அவருக்குமுன் இலக்கிய, இலக்கண நூல்கள் இருந்தமையையும், அவை அனைத்தின் அடிப்படையான சாரத்தைத் தொகுத்துத் தந்து, தொல்காப்பியர் தமிழின் வளர்ச்சி இடையறவுபட்டுத் தவறிவிடாமற் காத்தார் என்பதையும் அறிகின்றோம்.

17. தொல்காப்பியர் காலப் பின்னணி

தெற்கே குமரிக்கண்டம் என்ற நிலப்பரப்பு இருந்தது. இதில் 49 நாடுகள் (மாவட்டம் போல்பவை) இருந்தன. பல மலையடுக்கங்கள் இருந்தன. அவற்றில் தெற்கேயிருந்த மலைத் தொடரிலிருந்து பஃறுளியாறு ஒன்று ஓடியது. குமரி மலை என்ற பெயருடன், அதன் வடக்கே ஒரு மலையும் அதிலிருந்து ஓடிய குமரியாறும் இருந்தன. இவை எல்லாம் இரண்டு பெரிய கடல் கோள்களால் மறைந்து, கடலுள் மூழ்கிப் போயின.

அப் பன்மலையடுக்கத்தில்தான் பொதிகைமலை என ஒன்றும் இருந்துள்ளது. அங்கு அகத்தியர் இருந்து, பன்னிரு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார் என்றும் அவர்களுள் தொல்காப்பியரும் அவரெழுதிய நூலுக்குப் பாயிரம் பாடிய பனம்பாரனாரும் அடங்குவரெனவும் ஒரு செவிவழிச் செய்தி உளது.

முதற் கடல்கோளே மிகப் பெரிது என்பர். கிழக்காசிய நாடுகள் முதல், மேற்கே தென்னாப்பிரிக்காவரை பரவிக் கிடந்த நிலப்பரப்பை, குமரிக்கண்டம் என அழைக்கின்றனர். இக் கண்டம் முழுதுமே கடலுள் மூழ்கிப் போயின. இம்முதற் கடல்

கோளுக்குப் பிறகு குமரிமலையும் குமரியாறும் எஞ்சியிருந்த போது, தமிழைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்ட புலவர்களில் தலைமையானவர் தொல்காப்பியர். அவர் பாண்டியன் வேண்டுகோளுக்கு இணங்க, பழந்தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகள் அனைத்தையும் தொகுத்து, ஒரு நூலாக எழுதினார். அவர் எழுதியபோது தெற்கெல்லை குமரி ஆறாக இருந்தது. இரண்டாம் கடல்கோள் சிறியதே என்பர். அதற்கும் தப்பி வந்ததும், தொடர்ந்து பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் காப்புணர்ச்சியால், திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டன. இரண்டாம் கடல்கோளுக்குப் பிறகு இன்று எஞ்சிநிற்பது குமரிமுனையே; அவ்வாறு தொகுக்கப்பட்ட நூல்களே, இன்று நம் செவ்வியல் இலக்கியங்களாகக் கிடைத்துள்ளன.

18. கடல்கோள்கள் ஏற்பட்டதற்குச் சான்று

மேனாட்டவர் பலர், பூவியல் வல்லுநர்கள் கடல் கொண்ட இலெமூரியா (Lost Lemuria) என, இதுபற்றி ஆராய்ந்து கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவையப் புலவர்கள் மறந்தும் பொய்யான, நம்ப முடியாத எதனையும் பாடும் இயல்புடையவரல்லர். அவர்கள் கடல்கோள் பற்றிக் குறித்துள்ளவற்றில், தலைமையான சிலவற்றைக் காண்போம்:

மலிதிரை ஊர்ந்து மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன் *(104)*

என்பது கலித்தொகை.

பாண்டிய நாட்டு மண்ணைக் கடல் வவ்வியதால், ஏனைய, சோழ சேரநாட்டுப் பகுதிகளில், தப்பிவந்த குடிமக்களைக் குடியேற்றிய செய்தி இதிலுளது.

**பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்தும்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் *(சிலம்பு 11:19-22)***

பன்மலை அடுக்கம் - நீண்ட மலைத்தொடர். குமரிக்கோடு - அதில் ஒரு மலை; அதிற் பிறந்த ஓடிய ஆறு குமரியாறு. இதன்படி, தப்பிய மக்கள் வடநாடு வரை பரவியமை அறியப்படுகிறது.

மேலும் இக் கடல்கோள்கள் பற்றியும் மூன்று அவையங்கள் பற்றியும் இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது. அது செவிவழிச் செய்தியாய், பல நூற்றாண்டுகளுக்குக் கதையாய், கற்பனையாய் பேசப்பட்டமையை நினைவூட்டுகின்றது. அரிய, அற்புதச் செய்திகள் காலப்போக்கில் மக்களிடையே புராண வடிவம் பெறுவது உலக இயற்கையே. ரெனே வெல்லக்கு, இத்தகையவற்றை ‘மறைமுக உண்மைகள்’ (Indirect Truth) என்பார்.

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் இதுபற்றி, விரிவான செய்திகளைத் தந்துள்ளார். 49 - நாடுகளாகப் பரவி விரிந்து கிடந்ததை அவர் விவரிக்கின்றார்.

19. அவைய (சங்க) இலக்கியச் செவ்வியல் நூல்களையே இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

அவ்வாறு காட்டுவதற்கு நிரம்ப வாய்ப்புண்டு. தொல்காப்பியர் தமக்கு முற்பட்ட இலக்கிய, இலக்கணிகளை என்ப, என்மனார் புலவர், யாப்பென மொழிப யாப்பறி புலவர், நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே, நல்லிசைப் புலவர்... வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே, கடிநிலை இன்றே ஆசிரியர்க்க - என்று 235 இடங்களில் சுட்டிக் கூறுகின்றார்.

மேலும் உலகமொழி இலக்கணம் எல்லாம் எழுத்துக்கும் சொல்லுக்குமே இருக்க, இவர் மட்டும் பொருளிலக்கணம் என இலக்கியப் படைப்புப் பற்றிய தமிழ் மரபு அனைத்தையும் தொகுத்துத் தந்தது ஏன்? முற்கால இலக்கிய, இலக்கண

நூல்களையெல்லாம் கடல் கொண்ட நிலையில், முன்னைய யாப்புவடிவம், அணி, அகமும் புறமுமாகிய பாட்டுப்பொருள், இலக்கிய உருவாக்கக் கொள்கைகள், பாடலில் அமையும் சொற்கள், சொல் மரபுகள், தமிழில் தோன்றிய இலக்கிய வகைகளை எல்லாம் தொகுத்துத் தந்து, நம் பழைமைக்குப் பாலம் அமைத்துக் காத்தளித்ததே பொருளதிகாரம். இதுவே கடல்கோளால் ஏற்பட்ட அழிவைக் காப்பதற்கெனத் திட்டமிட்டு எழுதியதைக் காட்டுகிறது.

திருக்குறளும் தமிழர்கள் போற்றிக் காத்த நாகரிகம், பண்பாடு, சமயம் சாரா வழிபாடு, உலகப் பொதுமை நோக்குப் போன்றவற்றைத் தொகுத்துத் தருகின்றது என்றே கூறலாம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறப் பொதுநோக்கும் 'மக்கள்நுதலிய' (மக்கள் வாழ்வை இலக்கியமாக்கிய) அகப்பொருள், சுட்டி ஒருவர்ப் பெயர் கொளாது என்ற அகப் பொது நோக்குமே, திருக்குறளின் உலகப்பொதுமை நோக்கிற்கு அடிப்படைகளாகும்.

எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பழைமையைக் காக்கும் முயற்சி, இருப்பதை இழந்துவிடாதிருக்கும் எண்ணம், பல நல்லவற்றை மீட்டுருவாக்கி எதிர்காலத்திற்கு அறிவிக்கும் ஆர்வம் ஆகியவை புலனாகின்றன. 4 அடிமுதல் 8 அடி வரையுள்ள பாடல்கள் குறுந்தொகை, 9 முதல் 12 வரை உள்ளவை நற்றிணை, 13 முதல் 31 அடிகள் வரை உள்ளவை நெடுந்தொகை எனத் தொகுக்கப்பெற்றிருப்பதில், ஒரு திட்டமிடல் தெரியவில்லையா? அகநானூறுக்கு ஏற்பப் புறநானூறு, பத்துப்பத்துக் கொண்ட ஒருநூறு (பதிற்றுப்பத்து), பத்துப்பத்துக் கொண்ட ஐந்து நூறுகள் எனத் தொகுத்தவை அனைத்தையும் ஆராயின் ஒரு காப்புணர்ச்சி, மீட்டுருவாக்கம், சிதறிவிடாது செய்யும் தொகுப்புக்கலை யாவும் தெரிய வில்லையா?

சிலப்பதிகாரம், இளங்கோவடிகள் காலத்தே கண்ணகி பற்றி மக்களிடையே வழங்கிய நாட்டுப்புற இசை நாடகப்

பாடல்களின் அடிப்படையில், தொகுத்து அளிக்கப்பட்ட பெருங்காப்பியமேயாகும்.

இழந்தவற்றில் பத்தில் ஒரு பங்குகூட நமக்கு எஞ்சவில்லை. இச்சூழலில் இவற்றைத் தொகுத்துக் காத்துத் தந்த புலவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறு தொகுக்கச் செய்த வேந்தர்களும் நம் நன்றிக்குரியவர்கள் மன்னர்களின் அவையங்களில் இவை அரங்கேறின. பின்பு புத்த, சமணச் செல்வாக்கால் அவையம் என்பது சங்கம் என அழைக்கப்பட்டு நிலைபெற்றுவிட்டது.

சங்கங்கள் இருந்தமைக்கும் கடல்கோள்கள் ஏற்பட்டன என்பதற்கும் இத் தற்காப்புத் தொகுப்பு முயற்சிகளும் தக்க சான்றாகின்றன.

20. தொல்காப்பியர் காலம்

'மண்கடல் வௌவலின்', 'கொடுங்கடல் கொள்ள' என்றும் கூறப்படும் இச் 'சுனாமி' என்று இன்று அழைக்கப்படும் கடல்கோள், ஒரு தொடர் நிகழ்ச்சியாக நடந்திருக்க வேண்டும். தென்பகுதிக் குமரிக்கண்டம் இவ்வாறு மறைந்ததை, இறையனார் அகப்பொருளுரை, செவிவழிச்செய்தி என்பது தோன்ற, 'என்ப', 'என்ப' என்றே கூறுகிறது. ''அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டியநாட்டைக் கடல்கொண்டது.'' (இது இரண்டாம் சங்க முடிவு.)

காலங்காலமாக வழங்கிய ஒரு செய்தியைக் கேள்விப் பட்டு எழுதியது இது என்பது இந் நடைப்போக்கால் விளங்கும். அவ்வாறு வழங்கிய மக்கள் அதனைப் பெரிதுபடுத்தியோ, தத்தம் கற்பனைகளைச் சேர்த்தோ, கை கால் வைத்துக் கதையாக்கி வழங்குதல் மரபே. அதற்காக அது பொய்யாகாது.

இதன்படி அகத்தியம் முந்தியது; தொல்காப்பியம் பிந்தியது என்பதும் இத் தொல்காப்பியம் இடைச்சங்க காலத்து

இறுதியில் தோன்றி, கடைச்சங்கத்தார்க்கும் நூலாக விளங்கியது என்றும் தெரிகிறது.

இதன்படி தொல்காப்பியம் இன்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாதல் வேண்டும்.

பி.டி. சீனிவாச அய்யங்கார், ''பாணர்கள் பாடி வந்த, இவ் வாய்மொழிப் பாடல்கள், புலவர்கள் கைக்கு மாறி இலக்கியமாக ஐந்நூறு ஆண்டுகள்வரை ஆகியிருக்கும் என்பார். மிக வரையறைப்பட்ட செவ்விய இலக்கியமாக, மிகுந்த திட்ப நுட்பத்துடன் விளங்கும் அவையப் பாடல்களின் வளர்ச்சிக் காலத்தை ஆயிரம் ஆண்டுகளுக்குட்பட்டதாகக் கருதலாம். தொல்காப்பியம் இவ் வளர்ச்சி நிலையைச் சுட்டுவதால், காலத்தால் முற்பட்டது எனலாம்.

இந்திய வரலாற்றில் முதல் அரசக்குடி வழியினராகக் கருதப்படும் மோரியர், நந்தர் பற்றியும் பாடலிபுத்திரம் பற்றியும் நிகழ்காலக் குறிப்புள்ளதாலும், யவனர் பற்றிய (கிரேக்கர்) தெளிவான குறிப்புக்கள் இருப்பதாலும் அவையக் காலம் என்பதை கி.மு. ஐந்நூறுக்கு முற்பட்ட, பல நூற்றாண்டு வளர்ச்சிக் காலம் என்று கொள்ளலாம். அவை தொகுக்கப்பட்ட காலம் கி.மு. ஐந்நூற்றை ஒட்டியதாதல் கூடும். அவற்றுக்கெல்லாம் முற்பட்டது தொல்காப்பியம் என்பதற்கு ஐயம் இல்லை.

21. தொல்காப்பியர்

தொல்காப்பியர் - என்பது அவரது இயற்பெயராகும். காப்பியஞ்சேந்தனார் என்ற புலவர் காப்பியன் மகன் சேந்தன் எனப் பொருள்படும் (நற்றிணை 246), பதிற்றுப் பத்தில் நான்காம் பத்தினைப் பாடியவர் காப்பியாற்றுக் காப்பியனார். அதாவது அவர் ஊர் காப்பியாறு என்பது. சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தில், வரந் தரு காதைக்கண், 'காப்பியத் தொல்குடி' (83) என வருவது ஊர்ப் பெயராகும். இதன் அடிக்குறிப்பாக, உ.வே. சாமிநாதய்யர், 'காப்பியக்குடி என்பது சீகாழிக்குத் தென்

கிழக்கிலுள்ளதோர் ஊர்' என எழுதியுள்ளார். எனவே அன்று காப்பியாறு, காப்பியக்குடி, காப்பியாமூர் என ஆறு, குடி, ஊர்ப்பெயர்கள் வழங்கியுள்ளன என அறிகிறோம். பல்காப்பியன் எனவும் ஒரு புலவர் பெயர் காணப்படுகிறது. இதனால் தொல்கபிலர் என்பது போலத் தொல்காப்பியர் என்பதும் இயற்பெயராகவே தோற்றுகிறது.

அக் காலத்தில் நூலாசிரியன் பெயராலேயே நூலைக் குறிப்பிடும் பழக்கம் இருந்துளது. சேக்ஸ்பியரைப் படித்தேன், மில்டனைக் கற்றேன் என்றாற் போல்வது இது. தொல்காப்பியன் என வழங்கிய ஆசிரியர் பெயரே, நூலுக்கும் வழங்கி, பிறகு பிற்காலத்தில் வேறுபாடு அறிதற்பொருட்டு நூற்பெயரைத் தொல்காப்பியம் என அழைத்துள்ளனர்.

22. தொல்காப்பியம்

தொன்மைமிக்க தமிழ் இலக்கணத்தைப் பற்றிய, தமக்கு முந்தைய நூற்கருத்துக்களைத் திரட்டித் தருகிறது தொல்காப்பியம். இந்நூல் கிடைத்திலதேல், தமிழ்மொழியின் கட்டமைப்பும் வளர்ச்சியும் அறியப் படாமலே போயிருக்கும். இதன் சிறப்புக்களாவன:

1) வடவேங்கடம் முதல் தென்குமரி வரை பரவியிருந்த, தமிழக மக்களின் உலக வழக்கையும் இலக்கிய வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றமை.

2) 'செந்தமிழ் இயற்கை பொருந்திய நிலமாக' இருந்து, கடலுள் மறைந்த நிலப்பகுதியில் விளங்கிய, தமக்கு முற்பட்ட இலக்கிய, இலக்கண நூல்களைக் கற்று அவற்றைக் காத்து, திரும்பத் தந்தமை. இவ்வாறு தமிழ் மொழி இலக்கணப் புலங்களைத் தொகுத்துத் தந்தமை.

3) பொருளதிகாரம் - என இலக்கியத்திற்கும் இலக்கணம் தந்தமை. உலக மொழி இலக்கணமெல்லாம் எழுத்துக்கும் சொல்லுக்குமே இலக்கணம் வகுத்துள்ளன. தொல்காப்பியர்

தம் காலத்ததும் தமக்கு முற்பட்டதுமான இலக்கிய வகைகள், அவற்றின் யாப்பு வடிவங்கள், இலக்கியக் கொள்கைகள், அவை உருவாக்கப்பட்ட நெறிமுறைகள் அனைத்தையும் தொகுத்துத் தந்துள்ளார்.

4) கிரேக்க இலக்கிய அரிஸ்டாடில், சமஸ்கிருதப் பரதமுனிவர் போலும் உலக இலக்கியக் கோட்பாட்டாளர்களுடன், உடன்வைத்து எண்ணத்தக்க சிறப்புடன் விளங்குதல்.

5) இந்நூல், இக்கால 'ஆய்வியல் நெறிமுறைப்படி', ஒவ்வொரு பகுதியையும் படைத்திருப்பது, உண்மையிலேயே வியப்பளிக்கும் செய்தியாகும். எதனையும் அகர வரிசைப்படி கூறுதல்; முதலில் கருவி இயல்களை (Theory) வைத்து, பிறகு செய்கை இயல்களை (Practical) வைத்தல்; பிறர் கருத்தை மேற்கோள் காட்டுவதுபோல் எழுதுதல்; தம் கருத்தை நிலைநாட்டும் வகையில் எழுதுதல் எனப் பலவற்றைக் கூறலாம். வடமொழியுடன் ஒப்பிடும் இடம் சிலவுள்ளன. ஓரிடத்தில், மாத்திரை எனும் எழுத்தொலி அளவு பற்றிக் கூறும்பொழுது, வடமொழி முறை வேறு - யான்அதை ஏற்காது தமிழுக்கேற்ற முறையிலேயே கூறியுள்ளேன் எனத் தன்மை ஒருமையில் கூறுகிறார் (நூற்பா. 102).

தொல்காப்பியம் சிறந்த கட்டமைப்புடன் எழுதப்பட்டுள்ளது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும்பிரிவு, ஓர் அதிகாரத்திற்கு ஒன்பது இயல்கள் என இது பகுக்கப்பட்டுள்ளது. முதலில் வாய்மொழிப் பாடமாகவே சொல்லப்பட்டு வந்து, பிறகு மிக நீண்ட காலத்திற்கு ஓலைகளில் படியெடுக்கப்பட்டு வந்து, இன்றளவும் சிதைவின்றிக் கிடைப்பது இதன் பெருமையாகும். இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகள் அளவு விளக்கப்பட்டு வந்த இதற்கு, சோழப் பேரரசுக் காலத்தேதான், உரைகள் ஏட்டில் எழுதப்பட்டன. இடைக்காலச் சோழர் காலத்தில் இப்பழந்தமிழ் நூல்கள் புத்துயிர் பெற்றன; புலவர்களால் விரும்பிக் கற்கப்பட்டன. இளம்பூரணர் காலத்தால் முற்பட்ட உரையாசிரியர் ஆவார். பேராசிரியரும்

நச்சினார்க்கினியரும் குறிப்பிடத்தக்க வேறு உரையாசிரியர்கள் ஆவர். சொல்லதிகாரத்திற்கு மட்டும் சேனாவரையம், தெய்வச்சிலையம், கல்லாடம் எனப்பல உரைகள் கிடைத்துள.

பிற்காலத்தே இதன் வழிப்பட்டு மிகப்பலவான இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. இதில் வரும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர்பான தனிச் சிறு இலக்கண நூல்கள்; பொருளதிகாரத்தில் அகத்திணை பற்றிய தனி இலக்கண நூல்கள், புறத்திணை பற்றிய தனி இலக்கண நூல்கள் தோன்றின. இதில் வரும் செய்யுள்யாப்பு வடிவம் தொடர்பான நூல்களும் பல; இதன் உள்ளீடான அணிவகையை வடமொழிச் சார்புடன் எழுதிய அணி இலக்கண நூல்களும் சில. தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்றாகப் பகுத்தார். பொருளுக்குள் யாப்பையும் அணியையும் அடக்கினார். பிற்காலத்தார் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணம் கண்டனர். இதில் வரும் இலக்கிய வகைமை பற்றியன பின்னர் 'பாட்டியல் நூல்கள்' தோன்றவும், உரியியல் போல்வன நிகண்டுவகை தோன்றவும், புறத்துறைகள் பல சிற்றிலக்கிய வகையாகக் கிளைக்கவும் வழிசெய்தன. இசை, நாட்டியம், கூத்து, நாடகம், காப்பியம் போன்றவற்றுக்கான கருக்களும் இதில் முளைவிட்டு வளர்ந்தன எனில் மிகையாகாது.

23. தொல்காப்பியக் கட்டமைப்பு

தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியத் தொகுப்புக்கள், சிலப்பதிகாரம் ஆகியவை ஒரு செறிவான கட்டமைப்புக் குட்பட்டுள்ளன.` பாதுகாத்தற்கும் நினைவில் வைத்தற்கும் நிலைத்து நிற்பதற்கும் இது உதவும் எனத் திட்டமிட்டுள்ளனர்.

இவைஒவ்வொன்றன்கட்டமைப்பையும்உள்ளடக்கத்தையும் நன்கு தெரிந்து கொண்டாலே, செம்பாதிக் கல்வியாகும்.

தொல்காப்பியம் 1610 நூற்பாக்கள் கொண்டது. மூன்று அதிகாரமும் ஓர் அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களுமாகப்

பகுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பனம்பாரனார் பாடிய பாயிரம் ஒன்று உளது. அஃது ஒன்றே, தொல்காப்பியம் எழுதி, அரங்கேற்றப்பட்ட செய்தியைச் சுருக்கமாகத் தருகின்றது.

எழுத்ததிகாரம் : ஒன்பது இயல்களும் உள்ளடக்கமும்

1. நூன்மரபு: நூல்-இலக்கணம். அதன் அடிப்படை மரபான தமிழ் எழுத்துக்களின் பெயர், எண்ணிக்கை, ஒலியளவு, மெய்யெழுத்துக்களின் சேர்க்கை (மெய்ம்மயக்கம்) கூறப்படுகின்றன.

2. மொழிமரபு: முன்னது தனியே நிற்கும் எழுத்துக்களைப் பற்றியது. இவ்வியல் மொழியிடையே நிற்கும் எழுத்துக்களைப் பற்றியது. குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், அளபெடை, மெய்ம் மயக்கம், உயிரொலி மயக்கம் அல்லது எழுத்துப் போலி, மொழி முதலில் வரும் எழுத்துக்கள், மொழி இறுதியில் வரும் எழுத்துக்கள் கூறப்படுகின்றன. சொற்கள் ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொரு மொழி, தொடர்மொழி என மூன்றாகப் பகுக்கப்படுகின்றது. தமிழில் மூன்றெழுத்துச் சொற்களும் மிகுதி. பெரும் பாலானவை கூட்டுச் சொற்கள்-புணர்மொழிகள். அவை சேர்த்தற்கும் பிரித்தற்கும் உரியன. கரகாட்டம், கற்கோயில், மாவிலை, பைந்தமிழ், ஆற்றுப் படை, நாட்டுப் பண் என வரும்.

3. பிறப்பியல்: தமிழில் உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் உச்சரிக்கும்போது பிறக்குமிடம் கூறப்படுகின்றது.

4. புணரியல்: கூட்டுச்சொற்கள் எவ்வெவ்வாறு புணர்க்கப்படும் என்ற ‘கருவி’ எனும் நெறிமுறைகள் இதில் கூறப்படுகின்றன. சொற்களைப் புணர்க்கும் முறை, புணரும்போது இடையே வரும் உருபு, சாரியை பற்றித் தெளிவுறுத்தப்படுகின்றன.

5. தொகைமரபு: உயிர், மெய் என்று பிரிக்காமல் பொதுவாகத் தொகுத்துக் கூறவேண்டிய, புணர்ச்சி இலக்கணம் இதிலுளது.

6. உருபியல்: பெயர்களுடன் வேற்றுமை உருபுகள் புணரும் பொழுது ஏற்படும் மாற்றங்கள் இதிலுள.

7.உயிர்மயங்கியல்: உயிர் பன்னிரண்டு ஈற்றுச்சொற்கள் முதலில் நிற்க, வருமொழியோடு புணரும் இலக்கணம் இது.

8. புள்ளி மயங்கியல்: பதினெட்டு மெய்யீற்றுச் சொற்கள் முன்னே நிற்க, வருமொழியோடு புணரும் இலக்கணம் இது.

9. குற்றியலுகரப் புணரியல்: குற்றியலுகரச் சொற்கள் புணரும் இலக்கணம் இதிற் கூறப்படுகின்றன.

சொல்லதிகாரம்-ஒன்பது இயல்களும் உள்ளடக்கமும்

1. கிளவியாக்கம் - திணை, பால், எண், இடம் கூறப்படுகிறது. தொடரியல் வினா விடை மரபில் விளக்கப் படுகிறது. அவை தொடர்களாக, வாக்கியங்களாக அமையும் பல்வேறு நெறிகள் விளக்கப்படுகின்றன.

2. வேற்றுமையியல்
3. வேற்றுமை மயங்கியல்
4. விளிமரபு

} இவை மூன்றும் எட்டு வேற்றுமைகளின் பெயர்கள், அவற்றின் பொருள்கள், உருபுகள் மயங்கிவருதல், ஆகுபெயராதல், விளிவேற்றுமை ஏற்கும் நெறிகள் யாவும் கூறப்படுகின்றன.

5. பெயரியல்
6. வினையியல்
7. இடையியல்
8. உரியியல்

} இவை நான்குவகைச் சொற்களின் இலக்கணத்தை விளக்குகின்றன.

9. எச்சவியல்-பொதுவானவையும் முன்னர்ச் சொல்லப்பட்டன வற்றில் விடுபட்டனவும் இதில் கூறப்படுகின்றன.

பொருளதிகாரம்-ஒன்பது இயல்களும் உள்ளடக்கமும்

1. அகத்திணையியல் - காதல் பற்றிய அகப்பாடல்களின் அமைப்பு, ஏணையவற்றுக்கும் பொதுவான பிரிவும், புலனெறி வழக்கமும் இதில் விளக்கப்படுகின்றன.

2. புறத்திணையியல் - அகத்திணை ஏழற்கும் நிகராக வகுக்கப் பட்ட ஏழு புறத்திணைகளின் இலக்கணம் கூறுவது இது.

அகம்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, -

புறம்: வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பெருந்திணை, கைக்கிளை, காஞ்சி, பாடாண்

இவ்வாறு இவற்றின் அக ஒழுக்கமும் புறப்போர் முறைகளும் பிறவும் விளக்கப்படுகின்றன.

3. களவியல் - திருமணத்திற்கு முந்தைய களவொழுக்கம் பற்றியது.

4. கற்பியல் - திருமணமும் அதன்பின் நிகழும் இல்லற வாழ்வும், பிரிவும்.

5. பொருளியல் - அகப்பாடல்களில் அமையும் பொதுவான சில புணைவுமுறைகளும், கூற்று மரபுகளும்.

6. மெய்ப்பாட்டியல் - நாடகம், நாட்டியம், கூத்தில் வரும் மெய்ப்பாடுகள், சுவைகளை, இலக்கியத்திற்கு ஏற்றி விளக்குதல். சிறப்பாக அகத்திணை - காதல் வாழ்வு மெய்ப்பாடுகளும் கூறப்படுகின்றன.

7. உவமையியல் - உவமையின் இலக்கணம், வகைகள், உவம உருபுகள், உள்ளுறை உவமை, உவமை கூறுதற்குரியவர் யார்யார் என்பன பலவும் விளக்கப்படுகின்றன.

8. செய்யுளியல் - இது மிகப் பெரிய இயலாகும். வடிவம், யாப்புப் பற்றியவை, பாவகைகள், இலக்கியக் கொள்கைகள், அகத் திணைக்குப் பொதுவானவை யாவும் விளக்கப்படும் இது, ஆலமரத்தின் அடிமரம்போல விளங்குகின்றது.

9. மரபியல் - சொல்மரபு பற்றியது. உயிரினங்களின் இளமைப்பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள் போல்வன மரபு தவறாமல் ஆளப்பட வேண்டும். இதில் நூல்பற்றியும் உத்தி பற்றியும் வருவன மட்டும் பிற்காலத்தார் எழுதிச் சேர்த்ததாக இருக்கலாம். ஏனெனில் நூலும் நூல் உறுப்புக்களும் பற்றி, முன்பே செய்யுளியலில் கூறியவர், மீண்டும் அதைக் கூறமாட்டார்.

24. தொல்காப்பியப் பாயிரத்தின் சிறப்பு

பனம்பாரனார் தொல்காப்பியரின் உடன்மாணவர் என்பர். அவர் வரைந்துள்ள **'சிறப்புப் பாயிரம்'**, தொல்காப்பியத் தோற்றத்தை விளக்கும் முறை மிகு சிறப்புடையது. சுருங்கச் சொல்லி, விளங்கவைக்கும் அதனை, உலகின் முதல் இலக்கிய வரலாற்றின் தோற்றுவாய் எனலாம்.

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்

எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே, போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன் எனத் தன்பெயர் நாட்டிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

ஓர் இலக்கண நூல் எங்கு வழங்கும் மொழிக்கு எழுதப்பட்டது என்பதைக் குறிக்கவேண்டுமல்லவா? – 'வடவேங்கடமலைத் தொடருக்கும் தென்குமரியாற்றுக்கும் இடைப்பட்டது தமிழ் பேசும் நாடு. பிற இரண்டு பக்கங்களிலும் (கிழக்கும் மேற்கும்) கடல்களாதலின் கூறப்படவில்லை. அங்கு வழங்கும் மொழிக்கு எழுதப்பட்டது.

இலக்கண நூலுக்கான 'மூலங்கள்' யாவை? – உலகினரின் பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும் (செய்யுள் – இலக்கியம்). இவை இரண்டையும் நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டது இந்நூல். இதில் உலக வழக்கிற்கு முதலிடம் தரப்பட்டிருப்பது கருதற்பாலது. நூல் முழுதும் இதே போக்கினைக் காணலாம். உலகவழக்கு என்பது உயர்ந்தோர் வழக்கேயாம். ஏனைய கொச்சை வழக்கு, பிழை வழக்கு, குறுமொழி இவற்றை ஆசிரியர் ஏற்கவில்லை. இன்று இவையே 'நாட்டுப்புறவியல்' என வளர்த்து, தமிழைச் சிதைக்கும் 'மூடர்கள்' பெருகிவிட்டனர்.

இந்நூலின் அமைப்பு எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றையும் ஆராய்ந்து, இலக்கணம் கூறுவதாகும். இவற்றுடன் செந்தமிழின் இயற்கை பொருந்தித் திகழ்ந்த குமரிக் கண்டத்தில் வழங்கிய முந்தைய நூல்களையும் ஆராய்ந்து, முறைப்பட அனைத்தையும்

சிந்தித்து, இலக்கணப் புலங்கள் தொகுக்கப் பட்டன. ஒவ்வோர் இலக்கணக் கூறையும் ஒருபுலம் எனலாம். இவை தனி ஒருவர் தாமே விதிப்பன அல்ல. உலகில் வழங்குவன வற்றுடன், பழந்தமிழ் நூல்களையும் ஆராய்ந்து புதிய நூல் படைப்பதே, மரபு வழுவாமல் காக்கும்.

இந்நூல் 'போக்கறு பனுவலாக' (ஆய்வேடாக, ஆராய்ச்சி நூலாக) எழுதப்பட்டுள்ளது (போக்கு - குற்றம்).

நிலந்தரு திருவிற் பாண்டிய மன்னனது 'அவையத்தில்' (சங்கத்தில்) இந்நூல் அரங்கேற்றப்பட்டது. அதங்கோட்டாசான் தலைமையில் அரங்கேற்றம் நடந்தது. அங்கு தம் நூல் குற்றமற்றது என அவையோர் எழுப்பிய ஐயங்கள் தெளிவிக்கப்பட்டன.

அவர் யாரெனில், முற்றத் துறந்தவரும், கடல்சூழ் இவ்வுலகில் 'ஐந்திர வியாகரணம்' எனும் நூலைக் கற்றுத் துறைபோகியவரும் ஆகிய, தொல்காப்பியர்ஆவார். அவர் தம் பெயரையே நூலுக்கும் இட்டார். அதனால் 'தொல்காப்பியன் - என்றே அழைக்கப்பட்ட இந்நூல், பின்னர்த் 'தொல்காப்பியம்' என நூலிடை ஆசிரியனுக்கு வேறுபாடறிய வழங்கப்பட்டது. ஒரு நூலை எழுதுபவன், தனது மொழி நூல்களை மட்டும் படித்தாற் போதாது; ஒப்புமைக்காக, உடன் வழங்கும் பிறமொழி நூல்களையும் படிக்க வேண்டும். அதன்படியே தனது நூலின் தனித்தன்மையை நிறுவ முடியும். ஒப்புமை பார்ப்பதால், மொழிகளின் பொதுமையை அறிவதுடன், ஒரு மொழியின் தனித்தன்மைகளைக் கண்டுகூறவும் முடியும்.

இவ்வாறு தொல்காப்பியர் தமிழ்மொழியின் தனிச் சிறப்புக்களை, எக்காலத்திற்கும் பொருந்தும்படி, என்றும் நிலவும்படி படைத்துள்ளார்.

❖ ❖ ❖

அருந்தமிழ் உணர்ச்சிபெறப் பயிற்சி தரும் தமிழ்க்களம்

கருத்துலவழிப் புரட்சி - புதிய தமிழியக்கம்

1. தொல்காப்பியத் தோற்றம்
2. தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகள்
3. தொல்காப்பிய இலக்கணக் கொள்கைகள்
4. திருமுறைகள் உணர்த்தும் மறைபொருள் உண்மைகள்
5. சமற்கிருதமயமாக்கம் - மீட்டுருவாக்கம்
6. தமிழை வாழ்த்திக்கொண்டே வீழ்த்துவோம்!
   தாய் அழுதல் கண்டு தலை தாழ்த்துவோம்!
7. ஊடகங்கள் செய்யும் தமிழ்க்கொலை!
   கொடுமை கண்டு துடிப்பதா?
   கொலை வாளினை எடுப்பதா?
8. தமிழின் தொன்மையும் வளமையும்
9. செம்மொழிச் செவ்வியற் சீர்மைகள்
10. தமிழகப் பிராமணியமும் அந்தணியமும்

ஒவ்வொரு நூலும் உரூவா. பத்துக்குக் கிடைக்கும்

விற்பனை உரிமை

மீனாட்சி புத்தக நிலையம்

48 தானப்ப முதலி தெரு, மதுரை-625 001.

பேசி:0452-2345971